மக்கள் ஓசை 25-07-2023

பங்கோரில் ஜெயம் ஓட்டப்பந்தயக் குழு உதயமானது

டில்லிராணி முத்து

பங்கோர், ஜூலை 25-

தேசிய அளவில் இயங்கிவரும் ஜெயம் ஓட்டப்பந்தயக் கழகம் தற்போது தனது ஐந்தாவது கிளையை பங்கோரில் அமைத்துள்ளது.

இந்த ஜெயம் ஓட்டப்பந்தயக் கழகம் நாடு தழுவிய நிலையில் இந்திய மாணவர்களுக்கு ஓட்டப் பந்தயத்தில் ஆர்வம் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவது மட்டுமன்றி ஆங்காங்கே அதன் கிளைக் குழுக்களையும் அமைத்து வருகிறது.

முன்பு பங்கோர் தமிழ்ப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பங்கோர் ஜெயம் ஓட்டப்பந்தயக் குழு தொடக்கவிழாவில் தலைமை உரையாற்றியபோது அக்கழகத்தின் தோற்றுநரும் தலைவருமான தேசியப் பெருமைவீரர் குருசாமி சுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்.

ஒருகாலத்தில் ஓட்டப்பந்தயத் துறையில் சிறந்து விளங்கிய இந்தியர்களின் சகாப்தத்தை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்ற மிகப் பெரிய ஆசை கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

ஓட்டப்பந்தயத்தில் சிறந்து விளங்கும் இந்திய மாணவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து சிறப்பான முறையில் பயிற்சியளித்து அத்துறையில் சிறந்து விளங்க வழிகாட்டுவதற்காக இந்த ஜெயம் ஓட்டப்பந்தயக் கழகம் தோற்றுவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மலேசிய விளையாட்டுத் துறையில் 35 ஆண்டுகளுக்கு மேல் பெருமைவீரராக வலம் வந்துள்ள சித்தியவான் அருள்நிலையம், பங்கோர் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம் ஆகியவற்றின் ஆதரவோடு ஜெயம் ஓட்டப்பந்தயக்குழு சென்ற வியாக்கிழமையன்று இங்கு அமைக்கப்பட்டது.

சித்தியவான் சித்தர் குடில் தலைவரும் மலேசிய இந்துதர்ம மாமன்ற சித்தியவான் அருள்நிலையத் தலைவருமான ஆசிரியர் கிருஷ்ணன் சுப்பிரமணியம் பெறுப்பாளராக இருந்து இக்குழுவை அமைத்துக் கொடுத்தார்.

தன்னலம் பாராது பணியாற்றும் ஜெயம் குழுவினருக்கு இந்துதர்ம மாமன்றம் சார்பில் சால்வை அணிவித்து சிறப்பும் செய்யப்பட்டது.

பங்கோர் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய சார்பில் கலந்துகொண்ட அதன் செயலாளர் திரு. மு. இரஜேந்திரன், இந்த பங்கோர் ஜெயம் ஓட்டப்பந்தயக் குழுவுக்கு ஆலயம் சார்பாக எல்லா வகை உதவிகளையும் ஆதரவையும் வழங்குவதாக குறிப்பிட்டதோடு தனது பங்காக 500 சிங்கிட்டையும் உடனே ஒப்படைத்தார்.

இந்திகழ்ச்சியில் போட்டிக்சனிலிருந்து பயிற்றுநர்கள் விஜயன் தேவேந்திரன், பிரகாஷ் பாலகிருஷ்ணா ஆகியோரும் கலந்து கொண்டனர். பயிற்றுநர் விஜயன் தேவேந்திரன் மாணவர்களுக்கு தற்காப்பைப் உரையாற்றினார். அதோடு ஓட்டப்பந்தய நுணுக்கங்கள் பலவற்றையும் பகிர்ந்து கொண்டார்.

பங்கோர் ஜெயம் ஓட்டப் பந்தயக் குழுவுக்கு சேது பாலா கிருபானந்தன் ஜகதீ, பூவரசன் பச்சையப்பன், ஆகியோர் பயிற்றுநர்களாக இருந்து பயிற்சியளித்து வருகின்றனர்.

பங்கோர் தமிழ்ப்பள்ளி தலைமையாசிரியர் மு. இரவீந்திரன் பள்ளி வளாகத்தை திகழ்ச்சிக்காக வழங்கியதோடு மதிய உணவையும் ஏற்பாடு செய்து கொடுத்தார். இந்த நிகழ்ச்சி வெற்றிகரமாக அமைவதற்கு உதவி புரிந்த அனைத்து தரப்பினருக்கும் ஆசிரியர் கேசவால் சண்முகம் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

நான் உள்நாடு மட்டுமல்லாது வெளிநாடுகளிலிலும் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டு பல வெற்றிப் பதக்கங்களைப் பெற்றுள்ளேன் என்றும் அவர் சொன்னார்.

இந்த விளையாட்டுத் துறையில் தனக்கிருக்கும் நீண்டகால அனுபவமும் திறன்களும் வெறுமனே சென்று விடக்கூடாது என்பதால் இந்த ஜெயம் ஓட்டப்பந்தயக் கழகத்தை தோற்றுவித்து பணியாற்றி வருவதாகக் கூறிய அவர், ஓட்டப்போட்டியில் திறமை உள்ள, ஆனால் வசதி வாய்ப்புக் குறைந்த மாணவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு வழிகாட்டுவதும் ஊக்கம் கொடுத்து வெற்றிபெறச் செய்வதுமே தமது ஜெயம் கழகத்தின் தலையாய நோக்கமென்றும் அவர் விளக்கினார்.

மாணவர்கள் ஓடுவதற்கான காலணி, ஜெயம் முத்திரை கொண்ட டி சட்டைகள் போன்றவற்றை உதவும் மனம் கொண்ட தல்லுள்ளங்களின் உதவியோடு ஏற்பாடு செய்துக் கொடுத்து வருகிறோம். மலேசிய இந்துதர்ம மாமன்றம்



இந்துதர்ம மாமன்றம் ஜெயம் குழுவுக்கினருக்கு சிறப்பு செய்தபோது...



பங்கோர் ஜெயம் ஓட்டப்பந்தயக் குழுவினருடன் பொறுப்பாளர்கள்.

Scanned with CamScanner

மக்கள் ஓசை 02-08-2023



மஞ்சோங் சிகாரி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார்

குருபூஜை வெகு விமரிசையாக நடந்தேறியது

டில்லிராணி முத்து

மஞ்சோங், ஆக. 2-

சைவ சமயத்தில் போற்றப்படும் சமயகுரவர் நால்வரில் ஒருவரான ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூஜை சில தினங்களுக்கு முன்பு மஞ்சோங் சிகாரியில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தில் வெகு விமரிசையாக நடந்தேறியது.

சுந்தரமூர்த்தி நாயனார் சிவதலங்களுக்குச் சென்று சிவபெருமானைப் புகழ்ந்து பல திருப்பதிகங்களைப் பாடியுள்ளார். அவர் பாடிய பாடல்களை திருப்பாட்டு எனவும் சுந்தரர் தேவாரம் எனவும் அழைப்பர்.

'வித்தகம் பேச வேண்டா விரைந்து பணி செய்க' எனும் இறைவனின் சுட்டளையை சிரமேற்கொண்டு முப்பத்தெட்டாயிரம் பதிகங்களை அருளியுள்ளார் என்றாலும் நூறு பாடல்கள் மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளன. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் இயற்றிய திருத்தொண்டர் தொகை எனும் நூலில் 60 சிவனடியார்கள் பற்றியும் 9 தொகை அடியார்கள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. இவர் பாடிய தேவாரம் 7ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

சுப்பிரமணியம் பேசுகையில் சுந்தரமூர்த்தி நாயனார் பற்றிய வரலாறு, சைவ சமயத்திற்கு ஆற்றிய தொண்டு, பாடிய திருப்பதிகங்கள் போன்றவற்றை மாணவர்கள் மத்தியில் அறிமுகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்பாடு செய்ததாகக் கூறினார்.

மேலும் மஞ்சோங் மாவட்டத்தில் ஏழு ஆலயங்களில் இந்துதர்ம வகுப்பு நடைபெறுவதாகவும் கடந்த மாதம் பெருவாஸ் ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் மாணிக்கவாசகர் குருபூஜை நடைபெற்றதாகவும் குறிப்பிட்டார்.

இச்சிறப்புவட்டாரத்தில் அமைந்துள்ள பந்தாய் செமிஸ் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம், கம்போங் பாரு ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயம், துன் சம்பந்தன் ஆலயம் ஆகியவற்றிலிருந்து 70க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். அவர்களுக்கு வர்ணம் தீட்டும் போட்டி நடத்தப்பட்டது. அதோடு தேவார ஆசிரியை தொண்டர்மணி இராஜேஸ்வரி தலைமையில் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்றது. மேலும் சிவபுராணம், தேவாரம், பஜனை, பிரணவ மந்திரம் போன்றவையும் இடம்பெற்றன.

இவ்விழாவில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் ஆலயத் தலைவர் முனியாண்டி, துன் சம்பந்தன் தமிழ்ப்பள்ளி தலைமையாசிரியர் குமாரி தனலட்சுமி, பெங்கலான் பாரு



ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூஜையில் கலந்து கொண்டு மாணவர்களிடையே சிறப்புரை ஆற்றிய பந்தாய் செமிஸ் முன்னாள் கவுன்சிலர் ஆறுமுகம். ஆலயத்தில் நடைபெறும் சமய வகுப்பில் மாணவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தியதோடு நல்லொழுக்கங்கள் கொண்டவர்களாகத் திகழ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மலேசிய இந்து தர்ம மாமன்றம் சித்தியவான் அருள் நிலையத் தலைவரும் சித்தியவான் சித்தர் குடில் தலைவருமான ஆசிரியர் கிருஷ்ணன் அருள்நிலையத் தலைவர் அசோக் குமார் ஆகியோர் பரிசுகளை எடுத்து வழங்கினர்.

இந்தக் குருபூஜை விழாவை சிகாரி ஆலய தர்ம வகுப்பு பொறுப்பாளர் மணியம் மிக நேர்த்தியாக ஏற்பாடு செய்து கவனித்துக் கொண்டார்.

ஆசிரியர் கேசவால் சண்முகம் இவ்விழாவை மிகச் சிறப்பக வழிநடத்தியதோடு சுந்தரமூர்த்தி நாயனாரின் பெருமைகளையும் எடுத்துரைத்தார்.

பெருவாஸ் ஆலய குருக்கள் சிவஸ்ரீ மும்மூர்த்தி குருபூஜையை மிகச்சிறப்பாக நடத்திக் கொடுத்து திருநிறைவு செய்தார்.

Scanned with CamScanner

பாராட்டுத் தெரிவிக்கும்

ஸ்ரீ சீதா – ராமர் ஆலய மகா கும்பாபிஷேக விழா

சிறப்பாக நடந்தேறியது





ஆர். கிருஷ்ணன்

லுமூட், செப். 6-

இங்குள்ள ஸ்ரீ மஞ்சோங் தாமான் சமுத்ராவில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சீதா – ராமர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடந்தேறியது. 2.9.2023 காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன. அத்துடன் இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை சிறப்புப் பூஜைகள் நடைபெறுவதாக ஆலயத் தலைவர் ஆ. சுப்பிரமணியம் கூறினார்.

காலை 6.00 மணிக்கு பூஜைகள் தொடங்கப்பட்டு காலை 7.00 மணிக்கும் 8.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதாக அவர் தெரிவித்தார். ஆலய வளர்ச்சிக்கு ஆதரவு நல்கிய அனைவருக்கும் ஆலய கட்டடக் குழுத் தலைவர் ரா. சந்திரநாயுடு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 4.9.2023 முதல் 20.10.2023 வரை மண்டலாபிஷேகப் பூஜைகள் நடைபெறுகின்றன. 21.10.2023இல் மண்டலாபிஷேகப் பூஜையும் ஸ்ரீ சீதா – ராமர் திருக்கல்யாணமும் நடைபெறும் என்று அவர் சொன்னார்.

கொன்னார். டத்தோ கு.

சா.ஆ. அன்பானந்தன் தொடங்கிய மாஜு ஜெயா அவரின் கனவை நினைவாக்கும் வகையில் இப்போது

மாஜு ஜெயாவின் மேம்பாட்டிற்குத் துணை நிற்கும்படி கணேசன் கேட்டுக் கொண்டார்.

Makkal Osai

06-09-2023

Scanned with CamScanner

அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டது.

சமூகத்திற்கு கல்வி மிக முக்கி[illegible]காகும். ஆகை[illegible]

இன்றைய நாள் வரையில் வெற்றிக்கும் சாதனைக்கும் மூல காரணமாகத் திகழும் இந்[illegible]த்தின் நிர்[illegible]பினர்களை

சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டதோடு நல்லுள்ளங்களால் ஒன்றிணைந்த [illegible]க்கத்தை பாராட்டியதோ[illegible]ர்



மலேசிய நண்பன் 05-08-2023

அமைக்கப்பட்டதாக கழகத்தின் தலைவர் டத்தோ கே.புருஷோத்தமன்

சிறப்பாகச் செயலாற்றும் அனைத்து நிர்வாக உறுப்பினர்களுக்கும் தனது

[illegible]ட்டம் தொடங்குவதற்கு முன்பு வந்திருந்தவர்களுக்கு இரு தன்முனைப்பு

செல்வராஜா மற்றும் ரேகோ ராஜா ஆகியோரும் உறுப்பினர்களுக்கு உற்சாகம்

உரைகளை வழங்கினார்கள். இதனிடையே கடந்தாண்டு எஸ்.பி.எம் தேர்வில் சிறந்த

உதவிகளும் வழங்கப்பட்டன.

சித்தியவான் முத்து மாரியம்மன் ஆலயத்தில் சிறப்பு பூஜை

(பி.ஏ.கந்தையா)

மஞ்சோங், ஆக. 5-

சித்தியவான் இந்து தர்ம அருள் நிலையத்தலைவரும் சித்தியவான். சித்தர் குடில் சமய அமைப்பின் தலைவருமான கிருஷ்ணன் சுப்பிரமணியம் ஏற்பாட்டில் சிகாரிஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூஜை மிகச் சிறப்பாக ஆலய பொறுப்பாளர் மணியத்தின் தலைமையில் மிக நேர்த்தியாக நடை பெற்றது.

ஆலயத் தலைவர் முனியாண்டி, ஆயர் தாவார் துன் சம்பந்தன் தமிழ்ப் பள்ளி தலைமை ஆசிரியர் தனலெட்சுமி ஆகியோர் பங்கு பெற்று மாணவர்களுக்கு பரிசுகளை எடுத்து வழங்கினர்.

தொடர்ந்து பந்தாய் ரெமிஸ் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஆறுமுகம் சிறப்புரையாற்றினார். அவர் தம் உரையில் மாணவர்கள் இந்து தர்ம வகுப்புகளுக்குத் தொடர்ந்து வர வேண்டும். மாணவர் சமுதாயம் நல்லொழுக்க சீலர்களாக நற்பண்புகளுடன் திகழ வேண்டும்.

இச்சிறப்பு நிகழ்ச்சியில் 70 மாணவர்களும் பெற்றோரும் ஆலய பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் ஏற்பாட்டுக்குழு தலைவர் கிருஷ்ணன் சுப்பிரமணியம் விளக்க உரையாற்றினார்.

அவரின் உரையில் ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனாரின் வரலாறு அவர் பாடிய திருப்பதிகங்கள் அவர் இந்து சமயத்திற்கு ஆற்றிய தொண்டு முதலியவற்றை எடுத்தியம்பினார். பெருவாஸ் சிவஸ்ரீ மும்மூர்த்தி குருக்கள் நிகழ்ச்சியை சிறப்புடன் வழி நடத்தினார். அவருக்கு



துணையாகயிருந்து ஆசிரியர், கோபாலும் வழி நடத்தினார். அசோக்குமார், கண்ணகி உமாதேவி சரஸ்வதி, தேவிகா ஆகியோர் இந்து தர்ம ஆசிரியர்களாக சமயப்பாடங்களை நடத்தி வருகின்றனர்.

நிகழ்ச்சியின் சிறப்பு அங்கமாக கூட்டுப்பிரார்த்தனையும் சிறார்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டியும் நடைபெற்றன.



Scanned with CamScanner

தமிழ் மலர் 12-09-2023

மழைவண்ணத்து அண்ணலே உன் கைவண்ணம் அங்குக் கண்டேன்;

கால் வண்ணம் இங்குக் கண்டேன்: சித்தியவானில் கம்பர் விழா கண்டோம்:

முனைவர் கிங்ஸ்டன்

டிகே.மூர்த்தி

சித்தியவான், செப். 12-

கம்பன் தமிழ் இலக்கிய பேரவை தலைவர் பொன்.விக்ரம் தலைமையில், சித்தர் குடில் மலேசிய இந்துதர்ம மாமன்றம் சித்தியவான் அருள்நிலையம் ஏற்பாட்டில் "கம்பன் விழா 2023 கருப்பொருள் கம்பன் புகழ் பாடி கன்னித் தமிழ் வளர்ப்போம் என்ற கம்பரின் இராமாயணம் குறித்து தஞ்சோங் மாலிம் கல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் கிங்ஸ்டன் பால் தம்புராஜ் சிறப்பு வருகையாளராகக் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் இராமாயணம் என்பது முழுக்க முழுக்க மனித வாழ்வியலில் ஒழுக்கச் சித்திரமாக படைத்துள்ளார். இராமகாவியத்தில், சத்தியத்துடன் ஒழுக்கத்தை மீறாத இராமர் பாத்திரமாக கம்பர் தமிழில் படைத்துள்ளார். கோசல நாடு நெறியின் புறம்பாக நடந்திடாது தூய்மையிக்க-ஒழுக்கமிக்க நாடாகவும் கம்பன் பார்க்கிறான்-பேசுகிறான்.

அருள்தவத்தின் சாகசம் தழைத்து வையகத்தில் அன்பு அரும்பி, தருமம் தழைத்து கால்பதித்த கோசல நிலம் போன்று, பேரா மாநில சித்தியவான் நிலமும், கன்னித் தமிழில் காவியம் படைத்திட்ட சத்தியம் நிறைந்த தலத்தில் கம்பனுக்கு விழா எடுத்திருப்பதும், விழாவில் உரையாற்ற வாய்ப்பு வழங்கிய நிர்வாகத்திற்கும், முனைவர் கிங்ஸ்டன் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து உரையினைத் தொடர்ந்தார்.

நன்மை பயக்காததை ஒருவர் நினைத்தாலே, அந்த நினைப்பையும் சேர்த்தே அவரைச் சார்ந்தவரையும் அழிக்கும் என்பதற்கு அடையாளமாக படை வல்லமையும் இசை வளமையும் கொண்ட இராவணன் பிறன்மனை நோக்கியதால் அனைத்தும் இழந்தான். "இன்று போய் நாளை வா" என்ற வாய்ப்பையும் தட்டிக் கழித்தான் இராவணன். கொடுத்த வாக்குறுதியில் சத்தியம், நேர்மை, அறம், ஒழுக்கம் தவறாமல், பிறன்மனை நோக்காத பேராண்மை மிக்க இராமனின் வில்லறத்தின் முன்னால் போரிட்டு அழிந்தான் இராவணன் என்பதை கம்பரின் கவிதை நயத்தின் உரையை கேட்டு, ரசித்து, சுவாசித்துக் கொண்டிருந்த இலக்கிய ஆர்வலர்கள் மேலும், தங்கள் அதிகவனத்தை கம்பரின் அறத்தின் பக்கம் செலுத்தினர் என்பதை உணர முடிந்தது.





கம்பனின் மாந்தர்களில் சிறப்பாக பார்க்கப்படுவது, அகலி மற்றும் அரக்கி தாடகை பாத்திரங்கள். "கால்வண்ணம் அங்குக் கண்டேன்; கைவண்ணம் இங்குக் கண்டேன்" எனும் கவிதை வரிகள் இலக்கியவாதிகளின் நெஞ்சை ஊடுருவியது. ஒட்டுமொத்தத்தில், மனிதர் தம் வாழ்வியலில் ஒழுக்கத்தால் தசரத இராமனைப் போல் வரலாற்றினைப் படைப்பவர்கள் இருக்கவே செய்கின்றனர். இராவணனைப் போல் வாழ்ந்த வாழ்க்கையின் அடிச்சுவடு இல்லாமல் போவோரும் உள்ளனர்.

விரிவுரையாளர் கிங்ஸ்டன் மீண்டும் "கால் வண்ணம் இங்குக் கண்டேன்" எனும் விட்ட இடத்திற்கே வருகிறார். மணாளனுக்கு செய்திட்ட துரோகத்தின் சாபத்தால், கல்லாகக் கிடந்த அகலிகை, சித்தா இராமனுடைய திருவடி பட்ட அளவில் சாப விமோசனம் கிடைக்கப்பெற்ற நிலையில் மீண்டும் உயிர் பெற்ற பெண்ணாக மாறுகிறாள் அகலிகை. இங்கு உன் காலின் திறமையைக் கண்டோம் என்று கூறி, இராமனை ஒரு அவதாரப் புருஷனாகப் பார்க்கிறான் கம்பன்.

இராமனின் வில்லாற்றலால் தாடகை எனும் அரக்கி மாண்டாள். அந்த நிலையில் இராமனின் கைத்திறமை அங்குக் கண்டோம் என்ற கவிதையின் உள்ளடக்கத்தின் "மைவண்ணத்து அரக்கி போரில், மழைவண்ணத்து அண்ணலே-உன் கைவண்ணம் அங்குக் கண்டேன்-கால்வண்ணம் இங்குக் கண்டேன்" எனும் கவிச்சக்கரவர்த்தி கம்பன் நம்மை கவியுலகிற்கே அழைத்துச் செல்கிறான் என்றே கூறலாம்.

கற்பின் இலக்கணத்திற்கு களங்கமாக ஓர் அகலியா? ஐம்பொறிகள் படைத்திட்ட மனுதலத்தில் இப்படியொரு அகலி காணக்கிடைப்பாளா? நடந்த சம்பவத்திற்கு குற்றவாளி யார்? அகலியா அல்லது பூனை வடிவம் எடுத்துவந்த இந்திரனின் குற்றமா? என்ற வாதத்தில் அகலி குற்றமற்றவள் எனும் மாறுபாடுகளை பல இடங்களில் கம்பன் தமக்கே உரிய கவித்திறனில் அகலிப் பாத்திரத்தை முன்னுறுத்திப் பார்க்கிறார் என்று கூறி முதுநிலை விரிவுரையாளர் கிங்ஸ்டன் போல் தம்புராஜ் தமது பேருரையை நிறைவுக்குக் கொண்டுவந்தார்.

நடைபெற்ற கம்பன் விழா 2023 இல், பெருவாஸ் நாடாளுமன்ற இந்திய நலப் பொறுப்பதிகாரி தினகரன் கோவிந்தசாமி, மலேசிய இந்துசங்க லுமுட் வட்டாரப் பேரவை தலைவர் சக்திவேல் கெங்கன், ஆயர் தாவார் தமிழ்ப்பள்ளி முன்னாள் தலைமையாசிரியர், கவிஞர், எழுத்தாளருமான பை.மனஹரன், சித்தர் குடில், மலேசிய இந்துதர்ம மாமன்றம் சித்தியவான் அருள்நிலைய தலைவர் ஆசிரியர் கிருஷ்ணன் சுப்ரமணியம், கொலும்பியா தமிழ்ப்பள்ளி தலைமையாசிரியர் இரமணி, சொகமோர தமிழ்ப்பள்ளி முன்னாள் தலைமையாசிரியர் ஆறுமுகம், ஆயர் தாவார் தோட்ட தமிழ்ப்பள்ளி தலைமையாசிரியர் கிருஷ்ணன் மற்றும் தெலுக் இந்தான் ராஜா மூடா இடைநிலைப்பள்ளி முன்னாள் ஆசிரியர் பொன்.சச்சுதாந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

Scanned with CamScanner

மக்கள் ஓசை 15-09-2023

'கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்ப்போம்'

எனும் கருப்பொருளோடு பேராக் மாநிலத்தில் கம்பன் விழா



முனைவர் கிங்ஸ்டன் பால் தம்புராஜ் உரையாற்றுகிறார்.



பொன் விக்ரமன் உரையாற்றுகிறார்.



முன்னாள் தலைமையாசிரியர் மனஹரன் உரையாற்றுகிறார்.



சிறப்பு செய்யப்பட்டவர்களுடன் முனைவர் கிங்ஸ்டன் பால் தம்புராஜ், பொன் விக்ரமன் ஆகியோருடன் பிரமுகர்கள்.

● ராமேஸ்வரி ராஜா

சித்தியவான், செப். 15-

கம்பன் தமிழ் இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் கம்பன் விழா அண்மையில் சித்தியவான் சித்தர் குடில் அருள்நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் இலக்கிய ஆர்வலர்களும் சமய நெறியாளர்களும் கலந்து கொண்டனர்.

சிறப்பு பேச்சாளராக சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் முனைவர் கிங்ஸ்டன் பால் தம்புராஜ் கம்பன் காட்டும் வாழ்வியல் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

தசரத இராமனைக் காட்டும் அறம், ஒழுக்கம் தவறாமை, பிறன்மனை நோக்காத பேராண்மை குறித்தும் அவரது கால்வண்ணமும் கைவண்ணமும் கண்ட தடத்தை குறித்தும் மிக எளிய நடையில் அனைவரது உள்ளத்தில் கம்பனை நிலைத்திட செய்யும் வண்ணம் அவர் உரையாற்றினார்.

அவரைத் தொடர்ந்து, கம்பன் தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவர் தமிழ்திரு பொன். விக்ரமன் கம்பன் காட்டும் சூர்ப்பணகை எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

பஞ்சு ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம்; செஞ்செவிய கொஞ்சம் நிகர் சீறடியால் ஆகி என்கிற கம்பரின் சூர்ப்பணகை வருகையும் அவளால் ஒழுக்கம் தவறி சென்ற இராவணன் குறித்தும் அவர் பேசினார்.



வருகையாளர்களில் ஒரு பகுதியினர்.

கம்பன் தமிழ் இலக்கியப் பேரவைத் தொடர்ந்து பேராக் மாநிலத்தில் இன்னும் பல இடங்களில் இதுபோன்ற கம்பன் விழாவினை ஏற்பாடு செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விழாவின் நோக்கம் தமிழ் இலக்கியங்கள் மீது இளைய சமூகம் ஆர்வம் கொள்ள வேண்டும். அத்தோடு பாரதியார் சொல்வதுபோல் யாமறிந்த புலவர்களிலே கம்பனைபோல் வள்ளுவர்போல், இளங்கோவைபோல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என்று தெரிந்து வைத்திருப்பது மட்டுமன்றி கம்பர் எழுதிய கவிகளை உளமார கற்றுத் தமிழ் இன்பத்தை முழுமையாகப் பெற வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் முன்னோடியாகத் தான் எல்லாருக்கும் கம்பரை ஓர் அறிமுகம் செய்ய இப்பேரவை முன்வந்துள்ளது.

நாடு, மொழி, சமுதாயம் வளர்ச்சி காணும் காலத்தருணத்தில் நமது பாரம்பரியமும் இலக்கிய சுவடுகளும் காக்கப்பட வேண்டும் என்றும் விக்ரமன் கேட்டுக் கொண்டார்.

பெருவாஸ் நாடாளுமன்ற உறுப்பினரின் இந்திய நலப்பிரிவுப் பொறுப்பதிகாரி தினகரன் கோவிந்தசாமி, கவிஞரும் எழுத்தாளருமான முன்னாள் தலைமையா சிரியர் பை. மனஹரன் ஆகியோர் விழாவின் தொடக்கத்தில் உரைகள் ஆற்றினர். மலேசிய இந்துதர்ம பேராக் மாநிலத் தலைவரும் சித்தியவான் அருள்நிலையத்தின் தலைவருமான கிருஷ்ணன் சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இவ்விழாவில் மலேசிய இந்து சங்கம் லுமுட் வட்டாரப் பேரவைத் தலைவர் சக்திவேல் கெங்கன், தமிழ் ஆர்வலர்கள் விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

Scanned with CamScanner

தமிழ் மலர் 02-01-2024



பசுமை நினைவில் தேசிய ஒற்றுமை மலரும் நூல் வெளியீட்டு விழா

(டிகே.மூர்த்தி)

சித்தியவான், ஜன. 2–

எழுத்தாளர்கள் வரிசையில், சித்தியவானைச் சேர்ந்த எஸ்.கிருஷ்ணன் மற்றும் ஆர்.ரவிச்சந்தர் என்னும் இரட்டையர்களின் கைவண்ணத்தில் உருவான "பசுமை நினைவில் பி.எல்.கே.என்" தேசிய சேவை பயிற்சித் திட்டம்) நூல் வெளியீடு இங்குள்ள சித்தர் குடில் ஆன்மிக இல்லத்தில் நேற்று முன்தினம் 30–12–2023 சனிக்கிழமை மாலையில், சுபகதிரவன் தலைமையில், வட்டார வாசகர்களின் பேராதரவுடன் நடைபெற்றது.

இந்த நூல் நல்லதோர் விதை. இந்த விதையில் இளைஞர்களின் மிகப்பெரிய எதிர்காலம் இருக்கின்றது என்பதுதான் நூல் மதிப்பாய்வின் செய்தியாகும் என தஞ்சோங் மாலிம் உப்சி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முதுநிலை விரிவுரையாளர் டாக்டர் கிங்ஸ்டன் பால் தம்புராஜ் பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நூலின் மதிப்பாய்வின்போது ஓர் இடத்திலாவது குறை இருக்குமோ என்று குறையினை கழுகுக் கண்ணோடு தேடிப்பார்த்தபோது நன்னூலார் கூறிய அந்த 10 குறைகளில் ஒரு குறையும் இல்லாமல், நிறைகுடமாக நூலாசிரியர்கள் வாசகர்களுக்கு இன்பம் தரும் செய்திகளை முத்தாக வழங்கியுள்ளனர்.



தேசிய சேவை என்றால் என்ன? அதன் மூலம் மாணவர்கள் அடையும் நன்மைகள் யாவை? இளைய சமுதாயத்தினர், நாட்டின் தேசியக் கோட்பாட்டை (ருக்குன் நெகாரா) முன்னிறுத்தி வழி நடத்துவது எவ்வாறு? போன்று பல்வேறு கேள்விகளுக்கு ஆணித்தரமான பதில்கள் தரப்பட்டுள்ளன. "என்னிடம் நூறு இளைஞர்களை தாருங்கள். இந்த நாட்டை மாற்றிக் காட்டுகிறேன் என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ள அமுத வரிகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

இந்த நாட்டை வளப்படுத்த நம் முன்னோர்கள் வந்தார்கள். எதிர்பார்த்தபடி தங்கள் அயரா உழைப்பின் மூலம் நிறைவு செய்தனர். அதே போன்று இளைய சமுதாயினர் நாட்டுக்கு சேவையாற்றிட மீண்டும் தேசிய சேவை பயிற்சி சேவை என்பதையும் நூலாசிரியர்கள் இருவருமே வலியுறுத்தியுள்ள வாசகங்கள் மூலம் நம் இதயத்தை தொட்டுள்ளனர். இந்த நூல் நாடுதழுவிய அளவில் தமிழ் நெஞ்சங்களை சென்றடைய நாம் நமது பங்கினை ஆற்றுவோம் என முனைவர் கிங்ஸ்டன் மதிப்பாய்வுரை செய்தார்.

மலேசிய இந்து சங்கம், மஞ்சோங் வட்டாரப் பேரவைத் துணைத் தலைவர் கி.பெரியண்ணன் வாழ்த்துரை வழங்கினார். பாராட்டுச் சிறப்புரை ஆற்றினார் பேரா மாநில தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரும், கவிஞருமான நகு. முல்லைச் செல்வன். நிகழ்ச்சி நெறியாளராக ஆசிரியர் கோபால் சண்முகம் வழிநடத்தினார்.

நிகழ்ச்சியில் முதல் நூலைப் பெற்றவரும், குத்துவிளக்கு ஏற்றிவைத்தவருமான, மஞ்சோங் மாவட்ட சமூக சேவையாளர் லீலாலெட்சுமி கோவிந்தசாமி பாராட்டப்பட்டார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆசிரியர் கிருஷ்ணன் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

Scanned with CamScanner

மக்கள் ஓசை 09-01-2024

செவ்வாய்க்கிழமை 9 ஜனவரி 2024 மக்கள் ஓசை Makkal Osai

பள்ளி நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு

டில்லிராணி முத்து

சித்தியவான், ஜன. 9- அண்மையில் சித்தியவான் நகரில் பசுமை நினைவில் பி.எல்.கே.என். எனும் தேசிய சேவை பயிற்சித்திட்டம் தொடர்பான ஆவண நூல் ஒன்று வெளியீடு கண்டது. சித்தியவான் மண்ணின் மைந்தரும் தற்போது தலைநகரின் நன்கு அறிமுகமான தொழிலதிபருமான பொன். பெருமாள் அந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு 200 நூல்களை மொத்தமாக வாங்கிக் கொண்டார்.

பி.எல்.கே.என். தேசிய சேவை பயிற்சித் திட்டம் குறித்து எழுதப்பட்டிருக்கும் இந்நூலை படித்துப் பார்த்த பின் இந்நூல் பள்ளி மாணவர்களுக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை உணர்ந்ததாகக் அவர் குறிப்பிட்டார். ஆதலால் பள்ளிகளுக்கு அன்பளிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணம் தமக்கு தோன்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நூலில் தேசிய சேவை பயிற்சி தொடர்பான விளக்கங்கள், அதன் உருவாக்கங்கள், அதன் பின்னணி போன்றவை மட்டுமல்லாது மாணவர்கள் பள்ளி வாழ்க்கை முடிந்து தொடரவேண்டிய மேற்கல்வித் துறைகள், அடைய வேண்டிய இலக்குகள் போன்றவையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

மேலும் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் தன்முனைப்புக் கருத்துகளும் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே மாணவர்கள் தன்னூக்கம் பெறுவதற்கு இந்நூல் பெரிதும் உதவும் என தாம் நம்புவதாகவும் அவர் சொன்னார்.

அதனால் 200 நூல்கள் வாங்கியதாகவும் அவற்றை தாம் படித்த தமிழ்ப்பள்ளிக்கும் சித்தியவான், தெலுக் இந்தான் சுற்று வட்டாரத் தமிழ்ப்பள்ளிகளுக்கும் தாம் தற்போது குடியிருக்கும் கோலாலம்பூர் சுற்று வட்டாரத்திலுள்ள தமிழ்ப்பள்ளி நூலகங்களுக்கும் அன்பளிப்பு செய்ய விருப்பதாகக் கூறினார் பிரிக்பீல்ட்ஸ் நளபீமா கேட்டரிங் உரிமையாளருமான இளம் தொழிலதிபர் பெருமாள்.



தமிழ்ப்பள்ளிகளின் நூலகங்களுக்கு அன்பளிப்பாக 200 நூல்களை பொன். பெருமாள் வாங்கியபோது

Scanned with CamScanner

மக்கள் ஓசை 07-01-2023
Makkal Osai 15



வாழ்க பாரதீயம் எனும் முழக்கத்துடன் பெருவாசில்

மாபெரும் பாரதியார் இலக்கியப் பெருவிழா

● டில்லிராணி முத்து

பெருவாஸ், ஜன. 7–
பெருவாஸ் நாம் நற்பணி இயக்கத்தின் ஏற்பாட்டில் 5ஆம் ஆண்டாக பாரதி இலக்கியப் பெருவிழா அண்மையில் இங்குள்ள பெருவாஸ் முன்னாள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் தமிழ்மாறன் எழுச்சியுரையாற்றினார்.

மானுடன் முன்னெடுக்கும் ஒவ்வொரு செயலிலும் மனிதம் முதன்மை வகிக்க



Scanned with CamScanner

தமிழ்மலர் 04-01-2023
6 செய்திகள் தமிழ் மலர் 4-1-2024 வியாழக்கிழமை



பெருவாஸ் நகர் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் அசத்திய மகாகவி பாரதியின் பிறந்த நாள் விழா



(டிகே.மூர்த்தி)

பெருவாஸ், ஜன. 4–
மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 141 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை பெருவாஸ் நகரில் அமைந்துள்ள தமிழ்ப்பள்ளி மண்டபத்தில் பள்ளி மாணவர்கள் வெகு நேர்த்தியுடன் நடத்தியுள்ளனர்.

தமிழ்ப்பள்ளி மாணவர்கள் ஏராளமானோர் பங்குகொண்டிருந்த விழாவில், பாரதி வேடம் அணிந்தவுடன் அந்த மகாகவியே மறு அவதாரம் எடுத்துள்ளதைப் போன்று காட்சி அளித்தனர். பாரதியின் கவிதைகளை உயிரோட்டமாகவும் கவிதை வடிவிலான பாட்டுகளை அனல் பறக்க பாடி பெற்றோர்களையும் பார்வையாளர்களையும் அசத்தினர்.

தமிழ்ப்பள்ளிகளில் கடமையாற்றும் தமிழாசிரியர்கள் மாணவர்களுக்கு அளித்துள்ள பயிற்சிதான் பாரதியின் பிறந்த நாள் விழாவின் சிறப்புக்கும் பாராட்டுக்கும் காரணமாக இருந்தது. அந்நிலையில், வீர வசனத்தில் மீசைக்காரர். யாருக்கும் தலைவணங்கிடா முண்டாசுக் கவிஞர் பாரதிக்கு வீரப் பொட்டு வைத்து கொட்டு முரசு கொட்டிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

பாரதியின் 141 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா நினைவாக மஞ்சோங், பெருவாஸ் வட்டாரங்களில் 141 தென்னங்கன்றுகள் நடவு செய்யப்படுவது அந்த கவிதைக்கு விதையாகும்.

நாம் நற்பணி தமிழ் இளைஞர் இயக்கத்தின் சார்பில் தலைவர் எம்.தங்கராஜ், கூலிம் தவத்திரு சுவாமி பிரம்மானந்தா, கூலிம் பாரதி இலக்கிய நெஞ்சங்கள் இயக்கத் தலைவர் முனுசாமி, முன்னாள் விரிவுரையாளர் தமிழ்மாறன் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கோலலங்காட்டில் டெங்கிக் காய்ச்சல்

Scanned with CamScanner